# தமிழ் இலக்கியத்தில் எதிர்காலவியல் சிந்தனைக்கூறுகள்

**முனைவர் இரா. முரளி கிருட்டினன்**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

ஒவ்வொரு மொழியும் கால மாற்றத்திற்கேற்ப மேலைநாட்டு இலக்கியக் கோட்பாடுகளை உள்வாங்கிக்கொண்டு ஒரு புதுமையைப் படைப்புகளின் வழி வெளிப்படுத்துகிறது. அதேபோல் நாளும் வளர்கின்ற தமிழ்மொழியும் கால மாற்றத்திற்கேற்ப பிறநாட்டு கோட்பாடுகளை உள்வாங்கிக்கொண்டு, அதைப் படைப்புகளின் வாயிலாகக் கட்டமைத்துக்கொண்டு வருகின்றது. தான் கண்ட செய்திகளை எண்ணத்தினுள் கொண்டுசென்று அதனைச் சிறந்த கவிதையாகவோ, சிறந்த புனைவாகவோ படைக்கின்ற ஆற்றலைப் படைப்பாளர்கள் பெற்றிருக்கிறார்கள்.

சங்ககாலம் பண்பட்ட காலம். ஆன்றோர்களும், சான்றோர்களும் வாழ்ந்த காலம் சங்க இலக்கியம் மனிதர்கள் நாகரிகத்தோடு வாழ்ந்த சமுதாயத்தின் பிரதிபலிப்பு. இலக்கியங்களில் காணப்படும் மாண்பு, பாடுபொருள், வடிவம், அவற்றில் காணப்படும் வாழ்வியல் கோட்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்காலச் சிந்தனை இடம் பெறுவதைக் காணலாம். சங்க இலக்கியத்தில் காணப்படும் எதிர்காலச் சிந்தனைகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அவற்றைத் திட்டமிட்ட வாழ்க்கை முறை, ஒருமைப்பாடு, கல்வி, நட்பு, மறுமைச்சிந்தனை, வழித்தோன்றல், எதிர்காலக் கணிப்பு போன்ற தலைப்புகளில் இதனைக் காணலாம்.

### திட்டமிட்ட வாழ்க்கை முறை

சங்ககால மக்கள் திட்டமிட்ட ஓர் ஒழுக்கமான வாழ்வை வாழ்ந்திருக்கிறார்கள். அத்தகைய திட்டமிடுதலால் எதிர்கால சந்ததியினருக்கு நல்ல வாழ்க்கை முறையையும் ஒழுக்கத்ததையும் விட்டுச்சென்றிருக்கிறார்கள். திட்டமிட்ட வாழ்க்கை முறை மக்களின் எதிர்காலத்தை வளமுடையதாக்கும் என்பதைப் பொன்முடியார் பாடல் வழியாக அறியலாம்.

**ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே** **(புறம் 312)**

என்ற பாடலில் ஒவ்வொருவருக்குரிய கடைமைகள் திட்டமிடப்படுகின்றன. இத்தகைய திட்டமிடுதலால் அவர்களுடைய செயல்பாடும் அங்கு வடிவமைக்கப்படுகின்றன.

### ஒருமைப்பாடு

ஒருமைப்பாடு என்பது வாழ்கின்ற மக்களுக்கு மட்டுமன்று, நாட்டை ஆட்சி செய்கின்ற மன்னர்களுக்கும் வேண்டும் என்பதைச் சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. மூவேந்தர்களும் ஒருங்கே கூடியிருந்ததைக் கண்ட ஔவையார், அவர்களிடம் ஒருமைப்பாடு நிலவ வேண்டும் என்று வலியுறுத்துகிறார். நாகத்தன பாகர் மண்டிலம் வேந்தர்க்கு உரியதாயினும், அவ்வேந்தர் அழியும்போது உடன் அழிவதில்லை. அந்நியரேயாயினும் வலிமையுடையோரையே சென்று சேரும். எனவே, அரசியலை அறநெறியில் நடத்தி பொருளீட்டி இரவலர்க்கு ஈகைசெய்து வாழ்தல் வேண்டும் (புறம் 367) என்று எதிர்கால நோக்கில் அறிவுரை கூறுகிறார்.

### கல்வி

சங்க காலத்தில் கல்வி சிறப்புற்று விளங்கியது. கற்றோர் சிறப்பு பெறுவர் என்ற கருத்து நிலவியது. இதனை,

**உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே** **(புறம் 183: 1-2)**

என்ற பாண்டிய மன்னன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடியுள்ள பாடல் கல்வியின் சிறப்பைத் தெளிவாக விளக்குகிறது. கல்வியினால்தான் ஒருவனுக்கு சிறப்பு ஏற்படும், குலத்தால் அல்ல. அறிவுடையவன் கூறிய நெறியை அரசன் ஏற்பான் போன்ற கருத்துக்கள் கல்வியின் சிறப்பை எடுத்துரைக்கின்றன. எதிர்காலத்தில் கல்விதான் ஒருவனை உயர்த்தும்; அதனால், அனைவரும்ம கல்வி கற்க வேண்டும் என்பதை இப்பாடல் வலியுறுத்துகின்றது.

**நட்பு**

நட்பு என்பது மனிதப் பண்பாட்டுடன் கலந்துவிட்ட ஒரு வாழ்க்கைநெறி. சமுதாயத்தில் மனித நேயம் மலர்வதற்கு ஒரு வழிகாட்டியாக எல்லோருடனும் நட்பு கொள்ளுதல் அமைகிறது. எனவே ஆராய்ந்து நல்லவரை நண்பராகக்கொள்ள வேண்டும் என்னும் கருத்தினை இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. இதனை,

**நாடி நட்பினல்லது**
**நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே (நற்றிணை 32:7-9)**

என்று நற்றிணைப் பாடல் நட்பின் திறத்தை வலியுறுத்துகிறது. தன்னலமே குறிக்கோளாக உடையவர் புறங்கூறுவோர், மறைபொருளை வெளியிடுவோர் ஆகியோருடன் நட்பு கொள்ளற்க என்று கலித்தொகை 25வது பாடல் குறிப்பிடுகின்றது. நல்ல நட்பே என்றென்றும் நலம் பயக்கும் என்பதை இலக்கியங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

**மறுமைச் சிந்தனை**

மனித உயிரின் வாழ்க்கை பல பிறவிகள் தொடரும் என்ற நம்பிக்கை எல்லா மக்களிடத்திலும் உண்டு. தமிழர்களுக்குப் பிறவியின் பயன் இப்பிறவியைத் தாண்டி அடுத்த பிறவியில் மட்டுமல்லாது, ஏழேழு பிறவியிலும் அதன் விளைவு தொடரும் என்ற நம்பிக்கையுண்டு என்பதனைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.'.

**இம்மை உலகத்து இசையொடும் விளங்கி**
**மறுமை உலகமும் மறுவின்றி எய்துப**
**செறுநரும் விழையும் செயிர்தீர்க் காட்சிச்**
**சிறுவர்ப் பயந்த செம்மலோர் எனப்**
**பல்லோர் கூறிய பழமொழி (அகம் 66)**

என்ற அகநானூற்றுப் பாடலைச் சான்றாகக் காட்டலாம். குறுந்தொகையில் இப்பிறவி தாண்டி அடுத்த பிறவியிலும் நீயே என் கணவராக வரவேண்டும். நான், நீ விரும்புகின்ற பெண்ணாகப் பிறக்க வேண்டும் என்று தலைவி கூறுவதாக அமையும் பாடல் இதனை தெளிவுப்படுத்துகிறது. வள்ளுவரும் இதனை,

**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கள்**
**விழுமம் துடைத்தவர் நட்பு (குறள் 107)**

என ஏழு பிறப்பு வரை நீட்டிச் சிந்திப்பதில் தமிழர்கள் வீரமும் கொண்டிருந்தனர். நட்பும், கல்வியும் எதிர்கால நலனுக்கு மிகத்தேவையான ஒன்று என்பது இங்கு தெளிவாகிறது. மறுமைச் சிந்தனை சிலப்பதிகாரத்திலும் தொடர்ந்து வருவதை கோவலனைப் பிரிந்து நின்ற கண்ணகியிடம் தோழி தேவந்தி,

**சோமகுண்டம் சூரியகுண்டம் துறை மூழ்கி**
**காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு**
**தாமின்புறுவர் உலகத்துத் தையலார்**
**போகம் செய்பூமியினும் போய்ப் பிறப்பர் (சிலம்பு 9: 57-61)**

எனக் கூறுவதைக் காட்டலாம். இன்றைய சூழலில் எதிர்காலவியல் என்பது இன்றைய மனிதனின் மறுமையைப் பற்றிச் சிந்திக்கவில்லை. மாறாக, அவர்களது வழித்

தோன்றல்களைப் பற்றியே குறிக்கின்றது என்பதை சங்க இலக்கியங்களின் வழி அறியலாம்.

**வழித்தோன்றல் பற்றிய சிந்தனை**

எதிர்காலவியல் சிந்தனைகளில் வழித்தோன்றல் பற்றிய சிந்தனை இன்றியமையாதது. அவர்களின் வழித்தோன்றல்தான் எதிர்காலச் சமூகமாக உருவாவதால் அவர்களுடைய நலனும் கருத்தில் கொள்ளப்படுகிறது. பழந்தமிழர் தம் வழித்தோன்றல் மட்டுமின்றி அவர்களுடைய நலன்பற்றியும் சிந்தித்துள்ளனர் என்பதை,

**செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி**
**எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து** (குறள் 112)

என்ற குறள் வழி காணலாம்.

**எதிர்காலக் கணிப்பு**

எதிர்காலக் கணிப்பின் இரு இயல்புகளையும் பழந்தமிழ் இலக்கியங்களில் காணமுடிகிறது. இன்றைய செயல்களின் நாளைய விளைவுகளைக் கணித்துரைக்கும் இயல்பினை 'ஆற்றுப்படை' நூல்களில் காணலாம். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தபொழுது, தன்னைக் காணாது நட்புக் கொண்டிருந்த பிசிராந்தையார் தன் இறுதிக் காலத்தில் உறுதியாக வருவார் என்றும், அவர்க்கும் இடம் ஒதுக்கவேண்டும் என வலியுறுத்துவதை,

**கேட்டல் மாத்திரை அல்லது: யாவதும்**
**காண்டல் இல்லாது யாண்டு பல கழிய**

... ...

**காதற் கிழமையும் உடையன்; அதன் தலை**
**இன்னது ஓர் காலை நில்லலன்;**
**இன்னே வருகுவன்; ஒழிக்க அவற்கு இடமே** (புறம் 216)

எனும் புறப்பாடலில் பிசிராந்தையார் தன் நண்பன் எண்ணம்போல் அங்கு வந்து மெய்ப்பித்ததைக் காணலாம்.

நாளைய எதிர்பார்ப்பிற்கேற்ப இன்றைய செயல்களைத் திட்டமிட்டு அமைப்பது எனும் இயல்பினை,

**உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்**
**இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவென்ப** (குறள் 283)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**நிறைவாக**

தமிழிலக்கியத்தில் எதிர்காலவியலை இருநிலைகளில் அணுகலாம். ஒன்று, எதிர்கால இயலைக் கருவாகக்கொண்ட இலக்கியங்கள் பற்றிய ஆய்வு தமிழிலக்கியத்தின் எதிகாலம் எப்படியிருக்கும் எனக் காண்பது, மற்றொன்று பாடுபொருள், யாப்பு, பாட்டுலைமை, வடிவம் எனப் பல நிலைகளில் மாற்றமும், புத்தெழுச்சியும் கொண்டுள்ள தமிழிலக்கியம் எதிர்காலத்தில் எப்படியிருக்கும் எனக் காண்பது தனித்த, விரிந்த ஆய்வுக்குரியது.

**வருங்காலச் சிந்தனைக் கருத்துக்களுடன் நம் இலக்கியப் படைப்புகளை நாம் மீண்டும் நோக்கினால், இலக்கியங்களில் ஓர் புதுமையைக் காணலாம். பல புதுமைக் கருத்துக்கள் தோன்றும். வாழ்ந்த காலத்தை அவை படம்பிடித்துக் காட்டுகின்றன என்பது ஒரு நிலை; சற்று உறுதியற்ற நிலை. அவை வருங்காலக் கனவைக் காட்டுகின்றன என எண்ணி ஆராய்ந்தால் அவற்றின் புதுத்திறன், புதுமைத் திறன் வெளியாகும் என்பது உண்மை. இலக்கிய ஆய்வின் வளர்ச்சிக்கு இது பெரும் துணை செய்யும் என்பது உறுதி.**

எனும் தே. ஆல்பர்ட் அவர்களின் கருத்தும் இதனுடன் இணைத்து நோக்கத்தக்கது. படைப்பாளரின் எவ்வகை, எந்தக் கற்பனைகள், கனவுகள் நனவாகின்றன எனக் காண்பதும் சுவைமிக்க ஆய்வாக அமையும்.

**துணைநின்ற நூல்கள்**


1. புறநானூறு, புலியூர் கேசிகன் (உரை), சாரதா பதிப்பகம், சென்னை. முதற் பதிப்பு, டிசம்பர், 2010.
2. நற்றிணை, புலியூர் கேசிகன் (உரை), சாரதா பதிப்பகம், சென்னை. முதற் பதிப்பு, 2012.
3. அகநானூறு, புலியூர் கேசிகன் (உரை), சாரதா பதிப்பகம், சென்னை, பதிப்பு, 2012.
4. திருக்குறள், பரிமேழகர் உரை, கங்கை புத்தக நிலையம், சென்னை, பதிப்பு 2008.
5. குறுந்தொகை, புலியூர் கேசிகன் (உரை), சாரதா பதிப்பகம், சென்னை. பதிப்பு, 2012.
6. சிலப்பதிகாரம், புலியூர் கேசிகன் (உரை), சாரதா பதிப்பகம், சென்னை. பதிப்பு, 2012.